**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25.05.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் **40-வது வருடாந்திர பட்டமளிப்பு விழா** வருகின்ற **நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில்** நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் **31.03.2019** அன்று வரையிலான தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியர்களிடமிருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளமான **www.tnau.ac.in** **மூலம் 29.05.2019** முதல் விண்ணப்பம் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணத்தை பல்கலைக்கழக இணைய தளத்தின் **(The Comptroller, TNAU, Coimbatore)** மூலம் செலுத்த வேண்டும்.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் [அதாவது தற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் (PC) நகல், இறுதி பருவ மதிப்பெண் சான்றிதழின் நகல், இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இரசீது மற்றும் சமீபத்தில் எடுத்த புகைப்படம் (2nos.) ] இப்பல்கலைக்கழகத்திற்கு **15.07.2019-ம் தேதி மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும்.**

மேலும் இது சம்பந்தமான விவரங்கள் அறிய விரும்புவோர் **0422-6611506** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்